# சௌந்தர்ய மடல்

பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்தினை
பிரதிபலிக்கும் காலாண்டு வெளியீடு [டிசம்பர் 2011]


## காந்திகிராம அறக்கட்டளையின் 64–ஆவது ஆண்டு விழா:

காந்திகிராம அறக்கட்டளையின் 64–ஆவது ஆண்டுவிழாவும் 142–ஆவது காந்திஜெயந்தி விழாவும் 02–10–2011 முதல் 07–10–2011 வரை கொண்டாடப்பட்டன. 02–10–2011 அன்று காலை 7.00 மணிக்கு நூற்பு வேள்வியைத் தொடர்ந்து 7.30 மணிக்கு சர்வோதயப் பிரார்த்தனை ஆரம்பமானது. 03–10–2011 அன்று கிராம விரிவாக்கப் பிரிவு மற்றும் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் மூலம் பிள்ளையார்நத்தம் கிராமத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 04–10–2011 அன்று காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத்துறை மூலம் அகரம் கிராமத்திலும் 05–10–2011 அன்று குடும்பநல அறக்கட்டளையின் மூலம் முருகத்தூரான்பட்டி கிராமத்திலும் காந்திஜெயந்திவிழா கொண்டாடப்பட்டது. 06–10–2011 அன்று காலையில் மகளிர் கூட்டமும் மாலையில் ஊழியர்களுக்கான பொது விருந்தும் நடைபெற்றது.

07–10–2011 அன்று மாலை 4.00 மணிக்கு ஆண்டுவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காந்திகிராமத்தின் நிர்வாக அறங்காவலர் திரு. எம்.ஆர். ராஜகோபாலன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தமிழக அரசின் நிலவள மேம்பாட்டு ஆணையாளர் திருமதி M.B. நிர்மலா இ.அ.ப. அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் தமது சிறப்புரையில், கிராம அளவிலான பொருளாதார வளர்ச்சி வேலைகள் சிறப்புற நடைபெற்றால் தான் கிராமங்கள் தானாகவே வளர்ச்சி அடையும். அதன் பின்னர் தான் மாநில அளவிலும் தேசிய அளவிலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது எனக் கூறினார்.



இவ்விழாவில், கன்னியாகுமரி விவேகானந்தா மையத்தின் செயலாளர் திரு. G. வாசுதேவ்ஜி அவர்கள் சிறப்புரையாற்றினார். காந்தியப்பணி மற்றும் அமைதி ஆக்கத்திற்கான கெய்த்தான் சத்யா அறக்கட்டளை விருது வேதாரண்யம் கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுலம் நிர்வாக அறங்காவலர் திரு. A. வேதரத்னம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. டாக்டர் A.K. தரியன் நினைவு விருது மலைவாழ் மக்கள் நல்வாழ்வு மையத்தின் பயனாளிகளான மலைவாழ் மக்கள் மூலம் அதன் நிறுவனத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் லலிதா ரெஜி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் பணி ஓய்வு பெற்ற பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். சிறந்த மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர். கௌஸல்யாதேவி அவர்கள் நன்றிகூற காந்திகிராம கானத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது. தொடர்ந்து கலாச்சாராக் குழுவின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## அறிவு மேலாண்மை மையம்

காந்திகிராம அறக்கட்டளையின் நிறுவனங்களான லெட்சுமி சேவா சங்கம் மற்றும் கதர் கிராமக் கைத்தொழில் பொது அறக்கட்டளையின் செயல்பாடுகளைப் பார்வையிடுவதற்காகத் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் முதன்மை நிர்வாக அலுவலர் திரு. ஜதீந்திரநாத் சுவான் இ.அ.ப. அவர்கள் 01–12–2011 அன்று காந்திகிராமத்திற்கு வருகை புரிந்தார். அவருடன் மதுரையில் உள்ள கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்கள் ஆணையத்தின் இணை இயக்குநர் திரு. மதிவாணன் மற்றும் ஆணையத்தின் மற்ற அலுவலர்களும் வருகைபுரிந்தனர்.

லெட்சுமி சேவா சங்கத்தில் திரு. ஜதீந்திரநாத் சுவான் அவர்கள் குத்துவிளக்கேற்றி அறிவு மேலாண்மை மையத்தைத் துவக்கிவைத்தார். இம்மையத்தின் வாயிலாகக் கிராமத் தொழில்கள் வளர்வதற்கு ஏற்ற தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகள், மேலும் உற்பத்தி



செய்வதற்கான திறமைகளை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. திரு. ஜதீந்திரநாத் சுவான் அவர்கள் பேசும்போது கதர் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பில் எளிமையான மற்றும் பொருளாதாரத்தை உயர்த்தும் தொழில் நுட்பங்களைக் கையாள வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், காந்திகிராம அறக்கட்டளை அது மாதிரியான தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தும்போது கதர்வாரியம் இதற்குத் தேவையான நிதி மற்றும் உதவிகளையும் செய்யும் என்றார்.

காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர் திரு. கே. சிவக்குமார் அவர்கள் பேசுகையில், காந்திகிராம அறக்கட்டளை இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வரும் சர்க்காவின் மூலம் குறித்த நேரத்தில் அதிக உற்பத்தியை செய்வதற்கான திட்டம் செயல்படுத்த உள்ளது. மேலும், இம்மையம் அறிவியல் தொழில் நுட்பங்களில் ஆராய்ச்சி செய்து அவற்றை கிராமப்புற மக்களிடையே சென்றடைய வழிவகுக்கும். அதுமட்டுமல்லாது, M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து விவசாயத்திற்குத் தேவையான அறிவுசார்ந்த விவசாயச் செய்திகளை தினமும் கைபேசி மூலம் தகவல் கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள உள்ளோம் என்றார். இக்கூட்டத்தில் காந்திகிராம அறக்கட்டளையின் வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர்.கௌஸல்யாதேவி அவர்கள் மற்றும் துறைத் தலைவர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

திரு. ஜதீந்திரநாத் அவர்கள் காந்திகிராம அறக்கட்டளையின் அனைத்து அலகுகளையும் பார்வையிட்டார்.

---

## மாக்ஸ்ம்யுல்லர்

இந்தியாவின் பெரு நகரங்களில் எல்லாம் – குறிப்பாக டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை, பெங்களூர் போன்ற நகரங்களில் மாக்ஸ்ம்யுல்லர் பவன்கள் இயங்கிவருகின்றன. இவை ஜெர்மன் அரசாங்கத்தின் உதவியுடன் ஜெர்மானிய மொழி பயிற்றுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு அந்த நாடு பற்றிய தகவல்களையும் தருகின்றன.

யார் இந்த மாக்ஸ்ம்யுல்லர்? இந்தியாவைப் பொறுத்தவரை ரிக், யஜுர், சாம வேதங்களை முதன் முதலாகச் சீரிய முறையில் தொகுத்து இருபதிப்புகளாக ஆங்கிலத்தில் வெளியிட்ட பெருமை மாக்ஸ்ம்யுல்லரையே சாரும். மேலும், இவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில்தான் இவரது தலைமையில் ஜார்ஜ்ப்யூலர், ரிஸ்டேவிஸ், ஓல்டன்பர்க், திபாட் ஜவியஸ், ஜாலி மற்றும் சில பேராசிரியர்களின் ஒத்துழைப்புடன் ‘‘கீழைநாடுகளின் புனித ஏடுகள் (சேக்ரட் புக்ஸ் ஆப் தி ஈஸ்ட்) என்கிற தலைப்பில் ஐம்பது நூல்கள் வெளியிடப்பட்டன. இவற்றில் பாரதத்தின் வேதங்கள் தவிர, பகவத் கீதை, உபநிஷத்துகள், மனுநீதி, வேதாந்த சூத்திரங்கள், தம்மபதம், ஜைனை சூத்திரங்கள் மற்றும் பல தலைப்புகளும், பாரசீக நாட்டின் ஜிந்த் அவஸ்தாவும் சீனநாட்டின் ஃபோ–ஷோ–றிங் போன்ற புத்தகங்களும் அடங்கும். இப்பதிப்புகள் 1879 முதல் 1904 வரையிலான காலகட்டத்தில் வெளியாகின.

இந்தப் புத்தகங்களின் முக்கியத்துவம் என்னவென்றால், இப்புத்தங்கள் வெளியிடப்படும் வரை மேலை நாட்டு அறிஞர்கள் கீழை நாட்டு மக்களை வெறும் காட்டுமிராண்டிகள் என்றும் அவர்களுக்கு மதிப்புவாய்ந்த சரித்திரமோ கலாச்சாரமோ கிடையாது என்றும்தான் எண்ணி வந்தார்கள். 1757–ல் பிளாசியில் தொடங்கி 1900 க்குள் இந்தியா, பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியத்னாம், சீனா மற்றும் பல கீழை நாடுகள் ஆங்கிலேயர், பிரஞ்சு, டச்சு மற்றும் ஜெர்மன் நாட்டினரின் ஆதிக்கத்தில் வந்துவிட்டன. கீழை நாடுகளின் வளங்களைச் சுரண்டி தங்களை மேம்படுத்திக்கொண்ட மேலை நாடுகள், கீழை நாடுகளைப் பற்றி தவறான எண்ணங்களையே கொண்டிருந்தன. மேலும், நாகரீகமற்ற இந்தக் கீழை நாடுகளுக்கு நாகரீகத்தையும், அராஜகம் நிலவிய அந்நாடுகளில் சட்டம் ஒழுங்கையும், கல்வி அறிவற்ற அந்நாட்டினருக்குக் கல்வியையும் அளித்துத்

தாங்கள் கீழை நாடுகளுக்கப் பணி செய்வதாகவும் எண்ணின. ‘‘வெள்ளைக்காரர்களின் சுமை’’ என்ற மரபுச் சொல் இக்காலகட்டத்தில்தான் தோன்றியது. அதாவது கீழை நாடுகளை மேம்பாடுறச் செய்வதன் மூலம் பெரும் பாரத்தைத் தாங்கள் சுமப்பதாகக் கூறி ஒரு தவறான பிரச்சாரத்தை மேலை நாடுகள் செய்து வந்தன.

இதுபோன்ற அபத்தமான எண்ணங்களுக்கும் கருத்துக்களுக்கும் சவுக்கடியாக அமைந்தது மாக்ஸ்ம்யுல்லரின் தலைமையில் வெளியாகிய ‘‘கீழை நாட்டின் புனித ஏடுகள்’’ தான். மேலை நாடுகளின் நாகரிகம் வேரூன்றத் தொடங்கிய காலத்திற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே கீழை நாடுகளில் பெரும் நாகரிகங்கள் தோன்றிவிட்டன. அவற்றின் உயர்ந்த தத்துவ ஞானங்கள் பெருமை வாய்ந்தவை, சிறப்பு வாய்ந்தவை, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை எல்லாம் மேலை நாட்டினர் உணரத் தொடங்கியதற்கு மாக்ஸ்ம்யுல்லர் புத்தகங்களே காரணமாக அமைந்தன.

இப்போது மாக்ஸ்ம்யுல்லர் வாழ்க்கை பற்றிச் சற்று பார்ப்போம். 1823–ம் ஆண்டில் டிசம்பர் 6–ம் தேதி ஜெர்மனி நாட்டில் டெஸ்ஸாவ் என்கிற ஊரில் இவர் பிறந்தார். அவர் பள்ளியில் படித்த காலத்திலேயே அவரது புத்தக அட்டையில் பனாரஸ் நகரத்தின் புகைப்படம் இருந்தது. அதில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கங்கை நதியில் குளிக்கும் காட்சி வெளியாகி இருந்தது. அப்படத்தினால் மாக்ஸ்ம்யுல்லர் மிகவும் கவரப்பட்டார். இம்மக்கள் மிகவும் அழகானவர்கள், கங்கை நதி அழகானது, அந்தக் கோவில் அழகாக இருக்கிறது என்றெல்லாம் அவர் சொல்லிவந்தார். இந்தியாவின்மீது அவருக்கு ஏற்பட்ட காதல் காரணமாக இளம் வயதிலேயே சமஸ்கிருத மொழியைப் பயின்று தனது 21–வது வயதில் புராதன இந்தியாவின் கதைகள் என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை வெளிட்டார். தனது 24–வது வயதில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1869–ஆம் ஆண்டில் பல்மொழிகள் ஒப்பீட்டிற்கான துறையில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். முதலில் ரிக் வேதத்தையும், தொடர்ந்து யஜுர் மற்றும் சாம வேதங்களையும் கற்கத் தொடங்கினார். கூடவே உபநிஷத்துகள், கீதை மற்றும் பல புத்தங்களின் பல்வேறு பதிப்புகளை (சமஸ்கிருத மொழியில் மட்டும் இருந்தவை) ஆராய்ந்து சீரான முறையில் ஆங்கிலத்தில் வெளியிடத் தொடங்கினார்.

1900–ம் ஆண்டில் அக்டோபர் மாதம் 28–ம் தேதி ஆக்ஸ்போர்டிலேயே மாக்ஸ்ம்யுல்லர் அமரரானார். கீழை நாடுகளின் புனித ஏடுகளில் 50 பதிப்புகளும் தயாராகிவிட்டாலும் கடைசி சில பதிப்புகள் 1904–ம் ஆண்டு வரை வெளியாகின.

‘‘தனது வாழ்நாளில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மாக்ஸ்ம்யுல்லர் இந்தியாவின் ஆன்மீக உலகிலேயே வாழ்ந்தார். சமஸ்கிருத இலக்கியத்தின் எல்லையற்ற காடுகளில் சுற்றித் திரிந்து அந்த இலக்கியத்திலேயே ஆழ்ந்து போனார் அவர்’’ என்று அவருக்குப் புகழாரம் சூட்டுகிறார் சுவாமி விவேகானந்தர்.

உலகிலேயே மிகவும் செல்வம் கொழிக்கும் மற்றும் அழகும் அறிவாற்றலும் மிகுந்த நாடு இந்தியா தான் என்று மாக்ஸ்ம்யுல்லர் பல கட்டங்களில் உரையாற்றி வந்தார். மேலும், இந்திய தத்துவ ஞானிகளின் கருத்துக்கள் மேலை நாடுகளில் தலை சிறந்த தத்துவ ஞானிகளாகிய பிளாட்டோ மற்றும் காண்டின் கருத்துக்களைக் காட்டிலும் மேலானவை என்றும் அவர் கூறி வந்தார்.

மாக்ஸ்ம்யுல்லரின் வாழ்க்கை வரலாற்றில் மிகவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் இந்தியாவின் மீது எல்லையற்ற காதலும் மதிப்பும் வைத்திருந்த அந்த மனிதர், இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்ததில்லை என்பதுதான்: இந்தியாவைக் கனவுகளில் மட்டுமே கண்டு வந்த நான், இந்தியாவைக் கண்ணால் பார்க்காவிட்டாலும், ஆயுள் முழுவதும் பனாரஸ் நகரில் தான் வசித்து வந்தது போல் உணர்கிறேன் என்று கூறி வந்தார் மாக்ஸ்ம்யுல்லர்.

**எம்.ஆர். ராஜகோபாலன்**
நிர்வாக அறங்காவலர், காந்திகிராம அறக்கட்டளை

## சௌபாக்ய இல்லம்

திண்டுக்கல் மாவட்ட சமூகநலத்துறையின் மூலம் 02–09–2011 அன்று குழந்தைகள் காப்பகங்களில் செய்யப்படவேண்டிய பணிகள் மற்றும் காப்பகங்களில் இருக்க வேண்டிய வசதிகள் பற்றிய ஒருநாள் கருத்தரங்கு நடைபெற்றது. 05–09–2011 அன்று நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் சிறப்பாகப் பணிபுரிந்த பால்வாடி ஆசிரியர்களுக்கும், உதவியாளர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அரவிந்த் கண் மருத்துவனை மூலம் நடைபெற்ற கண்பரிசோதனை முகாமில் இல்லக் குழந்தைகள் கலந்துகொண்டு பரிசோதனை செய்து கொண்டனர். குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு தொடர் சிகிச்சை கொடுக்கப்பட்டு வருகிறது.

குழந்தைகளின் திறனை வளர்ப்பதற்காக உலக வங்கி ஆலோசகர் திரு. சதீஸ் அவர்கள் மூலமாக ரூ. 33,182/– வைப்பு நிதியாகப் பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து இந்த நன்கொடை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

## கஸ்தூரிபா சேவிகாசிரமம்

இப்பள்ளியில் அறிவியல் கண்காட்சி 8–11–11 அன்று நடைபெற்றது. காந்திகிராம துவக்கப்பள்ளி மற்றும் டாக்டர் சௌந்தரம் வித்யாலயா மாணவ–மாணவியர் அதனைப் பார்வையிட்டனர். காந்திகிராம அறக்கட்டளையைச் சேர்ந்த அனைத்துக் கல்வி நிறுவனங்களும் இணைந்து தேசிய கல்வி நாள் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடின. 17–11–2011 அன்று தலைமையாசிரியர்கள் கூட்டத்தில் 12–ஆம் வகுப்பில் 100% தேர்வு பெற்ற பள்ளிகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் கேடயம்



வழங்கப்பட்டது. இப்பள்ளிக்கும் கேடயம் கிடைத்தது. மேலும், காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில் நடனம், ஓவியம், பேச்சு, கட்டுரை, கோலம் ஆகிய போட்டிகளில் மாணவிகள் கலந்துகொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கோபிச்செட்டிபாளையத்தைச் சேர்ந்த டாக்டர் சத்தியசுந்தரி அவர்கள் சேவிகாசிரமத்திற்கு ரூபாய் ஒரு லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். ஆச்சாள் குடும்பத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவியல் ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்க ரூ.20,000/– வழங்கியுள்ளார். V.P. அண்ணா அவர்களின் புதல்வி டாக்டர் ஜெயந்தி அவர்கள் ரூ.17,000/– மதிப்புள்ள ஆய்வக உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

## காந்திகிராம தொடக்கப்பள்ளி

14–10–11 அன்று காந்திகிராமம் தொடக்கப் பள்ளியில் உலகக் கைகழுவும் தினம் கொண்டாடப்பட்டது. மனிதவள இயக்குனர் டாக்டர் K. வாசுகி அவர்கள் தலைமையில் பள்ளி வளாகத்தில் இவ்விழா நடைபெற்றது. குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டப் பணியாளர்கள் தன்சுத்தம், பொது சுகாதாரம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள். மேலும், உலகக் கைகழுவும் தினம் கொண்டாடப்படுவதற்கான காரணம், எவ்வாறு நாம் கைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் போன்ற



விபரங்களைச் செய்முறையுடன் எடுத்துக் கூறினர். குழந்தைகள் தான் எதிர்காலத் தலைமுறை; நீங்கள் சுகாதாரத்தைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கடைபிடிக்க வேண்டும்; வீட்டில் பெற்றோர்களுக்கும் சுகாதாரத்தைப் பற்றி எடுத்துரைக்கவேண்டும்; அனைத்து வீடுகளிலும் கழிவறை கட்ட வேண்டும் என்று டாக்டர் K. வாசுகி அவர்கள் கூறினார்.

## தம்பித்தோட்டம் மேல்நிலைப்பள்ளி

மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சி ஆறு மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்காக நடைபெற்றது. இது மாணவர்களின் தனித்திறனை வெளிக்கொணர்வதோடு அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதாக அமைந்தது.

நவம்பர் 20 அன்று J.R.C. மாணவர்களுக்கு ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இயக்கத் தலைவர் திரு. ஷேக்தாவூத் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். உடல் நலம், சேவை மற்றும் சகோதரத்துவம் பற்றிய பல்வேறு கருத்துக்களை அவர் விளக்கினார்.



மேலும், மின்சார வாரியத்தின் மின்சேமிப்புப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மின்சார வாரியத்தின் மூலம் நடத்தப்பட்ட 'மின் சேமிப்பு' பற்றிய பல்வேறு போட்டிகளில் பங்கேற்று மாணவர்கள் பரிசுகள் பெற்றனர்.

உலக எய்ட்ஸ் தினம் பள்ளியின் பல்வேறு அமைப்புகளான NCC, TRC, NSS, Red Ribbon மாணவர்கள் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் விதமாக ஊர்வலம் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## சாந்தி பள்ளி மாணவர்கள் சாதனை

சிவசைலத்தில் காந்திகிராம அறக்கட்டளையின் கீழ் இயங்கி வரும் சாந்தி காதுகேளாதோர் உயர்நிலைப் பள்ளியில் வாய்பேச முடியாத மற்றும் காதுகேளாத மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். தற்போது நெல்லை மாவட்டத்தில் அறிவியல் மையத்தில் 19வது தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாடு நடைபெற்றது. இம்மாவட்டம் முழுவதும் 13 குழந்தைகள் கலந்துகொண்டு இளம்விஞ்ஞானிகளுக்கான ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தனர். இதில் இப்பள்ளியைச் சேர்ந்த இளவரசன், ஷேக் முகமது, சரஸ்வதி ஆகிய மாணவ மாணவியர்



மண்வளம் பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து இளம் விஞ்ஞானிகளுக்கான சிறப்புப் பட்டத்தைப் பெற்றனர். போட்டியில் வெற்றிபெற்ற இம்மூவருக்கும் சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. இவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியை சத்திய மாதவிக்கும் சான்றிதழும் பரிசும் வழங்கப்பட்டன.

இம்மூவரையும் காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. எம்.ஆர். ராஜகோபாலன் அவர்கள், செயலாளர் திரு. கி. சிவக்குமார் அவர்கள், தாளாளர் திரு. சங்கரராமன் அவர்கள் மற்றும் காந்திகிராம பணியாளர்கள், பஞ்சாயத்துத் தலைவர் திரு. டி.பி.எம். ரெசூல் முகமது, சம்பன்குளம் ரகுமானியா தொடக்கப்பள்ளி கல்விக்குழுச் செயலாளர் வசந்தம் சித்திக், கல்விக்குழு உறுப்பினர் திரு. அல்லாபிச்சை ஆகியோர் மாணவர்களை வாழ்த்தினர்.

## உள்ளாட்சி அமைப்புகளில் சுய உதவிக்குழுப் பெண்கள்

கடந்த 2011 அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிட பெண்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்துவது, தகுதியுள்ள அனைவரையும் வாக்களிக்கச் செய்வது, பொதுத் தொகுதிகளிலும் பெண்களைப் போட்டியிடச் செய்து உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கச் செய்வது போன்ற கருத்தினை நோக்கமாகக் கொண்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மதுரை ஏக்தா நிறுவனத்துடன் இணைந்து தேர்தலில் போட்டியிட விரும்பிய பெண்களுக்கு ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. அதில் 100–க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். சுவரொட்டி, கண்காட்சி மற்றும் ஆத்தூர் ஒன்றியத்தில் 20 ஊராட்சிகளில் பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட, ஒன்றியக் கவுன்சிலர், ஊராட்சித் தலைவர், மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவிக்கு ஆத்தூர் ஒன்றியத்தில் 31 பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது சுயஉதவிக்குழுப் பெண்கள் 18 பேரும் சிறப்பாகச் செயல்பட்டனர். இவர்களில் 9 பேர் இந்தத் தேர்தலிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முகப்பூச்சு கிரீம் (குங்குமாதி லேபம்)

லெட்சுமி சேவா சங்கத்தின் தயாரிப்பான குங்குமாதி லேபம், புதிய டியூப் வடிவில் 30–11–2011 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய கிரீமை, அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் S. சுடலை முத்து அவர்கள் வெளியிட்டார். லெட்சுமி சேவா சங்கத்தின் பொருளாளர் திரு. கி. சிவகுமார் அவர்கள் பேசும்போது, இப்புதிய முகப்பூச்சுக் கிரீமைத் தயாரிப்பதற்கான கருவிகளை வாங்குவதற்கு நிதியுதவி அளித்த கதர் கிராமக் கைத்தொழில் ஆணையத்திற்கு நன்றி தெரிவித்தார். மேலும், ஆராய்ச்சி மூலம் குங்குமாதி லேபத்தை ஒரு சந்தைப் பொருளாக வெளிக்கொணர்ந்த லெட்சுமி சேவா சங்கத்தின் பணியார்களுக்கும் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்தார். மேலும், சமூக



நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருள்கள் உயர் தரமாயிருந்தாலும் கூட சந்தைப்படுத்துவதில் பல சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்றார். போதுமான விளம்பரங்கள் இல்லாததால் மக்களை இப்பொருட்கள் சென்றடையவில்லை எனவும், கார்ப்பரேட்

நிறுவனங்கள் போதுமான நிதியுதவியை தத்தம் சமூகப் பொறுப்புத் துறை மூலம் இத்தகைய செயல்களுக்கு அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

துணைவேந்தர் தமது உரையில், சிவப்பழகுக் கிரீமை சங்கம் உருவாக்கியதில் பெரும் மகிழ்வடைகிறேன். இதில் மஞ்சள், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், மஞ்சிஷ்டாதி, குங்குமப்பூ மற்றும் சந்தனத் தைலம் போன்ற மக்களின் உபயோகத்திற்கு தீங்கு விளைவிக்காத இயற்கை மூலிகைகளைக் கொண்டுள்ளது பாராட்டத்தக்கது எனக் கூறினார். வேதிப் பொருட்களை உள்ளடக்கிய பல முகக் கிரீம்களை அவற்றின் பக்க விளைவுகளால் உபயோகிக்கத் தயங்கும் பெண்களுக்கு இந்த குங்குமாதி லேபம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றார். அழகப்பா பல்கலைக்கழகம் தனது அறிவியல் ஆராய்ச்சித் துறைகள் மூலம் லெட்சுமி சேவா சங்கத்தின் சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளை மேம்படுத்துவதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொள்ளும் எனவும் இதனால் சித்தா ஆயுர்வேத மருத்துவம் வளர்ந்திடும் எனவும் கூறினார்.

## முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வி. நூற்றாண்டுவிழா

முன்னாள் குடியரசுத் தலைவரும் காந்திகிராம அறக்கட்டளையின் புரவலருமான திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களின் நூற்றாண்டுவிழா கடந்த ஒரு வருடமாக கொண்டாடப்பட்டு வருகிறது. திரு. ஆர். வெங்கட்ராமன் பவுண்டேஷன் மூலம் காந்திகிராமத்தில் தன்னார்வ இளைஞர்களை உருவாக்கும்பொருட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் 100 கிராம இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவர்கள், கிராம முன்னேற்றத்திற்கான பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். 03–12–2011 அன்று அன்னாரது நூற்றாண்டு நிறைவுவிழா காந்திகிராம அறக்கட்டளை டாக்டர் சௌந்தரம் மணிமண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களின் புதல்வி திருமதி பத்மா அவர்கள் கலந்துகொண்டார்கள்.

இவ்விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர்



திரு. கி. சிவக்குமார் அவர்கள் வரவேற்றார். அறக்கட்டளையின் நிர்வாக அறங்கவாலர் திரு. எம்.ஆர்.ராஜகோபாலன் அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், முக்கியமாக காந்திகிராமத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது பற்றி எடுத்துரைத்தார்.

திரு. ஆர்.வி. அவர்களின் புதல்வி திருமதி பத்மா அவர்கள் தனது நினைவுச் சொற்பொழிவில், தமது தந்தையார் எப்பொழுது பேசினாலும் இந்தியக் கலாச்சாரம், குழந்தைகள் வளர்ப்பு, கல்வி, ஆரோக்கியம், சித்த வைத்தியம், காலத்திற்கேற்ற மாற்றங்கள் மற்றும் நிலையான வளர்ச்சி எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு காந்திகிராமம்தான் ஒரு மாதிரிக் கிராமம் என்று கூறுவார். கிராமத் தன்னார்வத் தொண்டு இளைஞர்களை உருவாக்குவதற்குத் தொடர்ந்து ஆண்டுதோறும் ரூபாய் ஒரு லட்சம் கொடுப்பதாக உறுதியளித்தார்.

முன்னதாக, முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களின் நூற்றாண்டு விழா மலரை திருமதி பத்மா அவர்கள் வெளியிட காந்திகிராம அறக்கட்டளையின் வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர். கௌசல்யாதேவி அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். டாக்டர் மா.பா.குருசாமி அவர்கள், நிலக்கோட்டைத் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. A.S. பொன்னம்மாள் ஆகியோர் விழாவில் கலந்துகெண்டு சிறப்புரை ஆற்றினர்.

## சமூகத் தணிக்கை (Social Audit)

காந்திகிராம அறக்கட்டளையின் மூலம் ஸ்ரீநிவாசன் சமூக அறக்கட்டளையின் பணிகள் தணிக்கை செய்யப்பட்டன. ஸ்ரீநிவாசன் சமூக அறக்கட்டளையானது திருவண்ணாமலை – படவேடு, தர்மபுரி–ஒசூர், தூத்துக்குடி–நவதிருப்பதி மற்றும் திருநெல்வேலி–திருக்குறுங்குடி ஆகிய பகுதிகளில் கிராம விரிவாக்கப் பணிகளான பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது. அப்பணிகளைச் சமூகத் தணிக்கை செய்வதற்காக



காந்திகிராம அறக்கட்டளையின் கீழ் இயங்கிவரும் டாக்டர் சௌந்தரம் அறக்கட்டளையின் மூலம் எட்டுபேர் கொண்ட குழு, 28–10–2011 முதல் 11–11–2011 வரை ஆய்வு செய்தது. மேலும், இத்தணிக்கை பற்றிய கலந்துரையாடல் கூட்டம் 21–11–2011 அன்று திருக்குறுங்குடியில் நடைபெற்றது. இதில் திட்டப் பணிகள் பற்றிய கருத்துக்களை அனைவரும் பகிர்ந்துகொண்டனர். இறுதியாக, திட்டப்பணி அறிக்கை ஸ்ரீநிவாசன் அறக்கட்டளைக்கு 10–12–2011 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

## டாக்டர் சௌந்தரம் அறக்கட்டளை

காந்திகிராம அறக்கட்டளையின் கீழ் இயங்கிவரும் அனைத்துக் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவியர்களின் எழுத்தாற்றல், கைவண்ணங்கள் மற்றும் அவர்கள் திறமைகளை வெளிக்கொணரும் பொருட்டு டாக்டர் சௌந்தரம் அறக்கட்டளை நினைத்தது. அறக்கட்டளையின் நினைவுகள் "வாடா மலர்" என்ற பெயர்ச் சுமந்து என்றென்றும் அனைவரது மனத்திலும் மணம் வீசும் மலராக உருவெடுத்து, நேரு மாமாவின் பிறந்த நாளான நவம்பர் 14–ஆம் தேதி அன்று டாக்டர் சௌந்தரம் மணிமண்டபத்தில் முதல் காலாண்டிதழாக வெளியிடப்பட்டது. காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. எம்.ஆர்.ராஜகோபாலன் அவர்கள் வெளியிட காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் டாக்டர் ம. வேலுசாமி அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

இந்த மலரில் இளஞ்சிட்டுக்களின் எண்ணங்கள் கட்டுரை, கதை, கவிதை, ஓவியம் மற்றும் பல்சுவைப் பகுதி என "வாடாமலர்" பூங்கொத்து வடிவில் பிரதிபலிக்கின்றது.



## ஸ்பூர்த்தி திட்டம்

இத்திட்டத்தின் காந்திகிராம விற்பனைப் பிரதிநிதிகளின் மாதாந்திரக் கூட்டம் 03–11–2011 அன்று லெட்சுமி சேவா சங்கத்தில் நடைபெற்றது. அதில் ஒவ்வொரு விற்பனைப் பிரதிநிதியும் லெட்சுமி சேவா சங்கம் மற்றும் கதர் அறக்கட்டளை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும்



பொழுது ஏற்படும் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். மேலும், இத்திட்டத்தின் மூலம் TVS ஸ்ரீசக்ரா டயர்ஸ் மற்றும் TVS ரப்பர் உற்பத்தி நிறுவனங்களின் சித்தா மற்றும் ஆயூர்வேத மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் டாக்டர் ரேவதி அவர்கள் கலந்துகொண்டு மருத்துவப் பரிசோதனை செய்தார்.

## Self Renewal

காந்திகிராம அறக்கட்டளையின் ஐந்து ஆண்டுக்கான திட்டவரைவு பற்றிய கூட்டம் சிவசைலத்தில் 2011 நவம்பர் 19, 20 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர் திரு. கி. சிவக்குமார் மற்றும் காந்திகிராம அறக்கட்டளையின் மேலாண்மை வல்லுநர் திரு. வி.சி. நடராஜன் ஆகியோர்



இத்திட்டம் தயாரிப்பிற்கு உறுதுணையாக இருந்தனர். காந்திகிராம அறக்கட்டளையின் பல்வேறு அலகுகளின் பணியாளர்கள் கலந்துகொண்டு இப்பணியினை திறம்படச் செய்து காந்திகிராம அறக்கட்டளையின் தொலைநோக்கு, குறிக்கோள்களை அடைவதற்கான முழு வடிவம் அமைத்துள்ளது பாராட்டுதற்குரியது ஆகும்.

## கவலையை விடுங்கள் !

இரண்டு விஷயங்கள் பற்றித்தான் நீங்கள் கவலைப்பட வேண்டும் – நீங்கள் நலமாக இருக்கிறீர்களா அல்லது நலக்குறைவுடன் இருக்கிறீர்களா – என்று. நீங்கள் நலமாக இருந்தால் கவலையை விட்டுவிட வேண்டியது தானே. நீங்கள் நலக்குறைவுடன் இருந்தால் – மறுபடியும் இரண்டே விஷயங்கள் தான் உங்களுக்குக் கவலை தரும். ஒன்று நீங்கள் இறக்க நேரிடலாம். நீங்கள் உடல் நலம் பெற்றுவிட்டால் கவலை எதற்கு? அப்படி இன்றி நீங்கள் இறக்கப் போகிறீர்கள் என்ற நிலை வந்துவிட்டால் – மறுபடி இரண்டு விஷயங்கள் பற்றி மட்டும் கவலைப்பட வேண்டும். நீங்கள் சுவர்க்கத்திற்குப் போவீர்களா – அல்லது நரகத்திற்குப் போவீர்களா – என்று, நீங்கள் சுவர்க்கத்திற்குப் போவீர்கள் என்றால் இதைவிட பெரிய இன்பம் என்னதான் இருக்கிறது? நிச்சயம் கவலைப்படவேண்டாம். மாறாக, நீங்கள் நரகத்திற்குச் செல்ல நேரிட்டால் – உங்களுக்குப் பரிச்சயமான நூற்றுக்கணக்கான நண்பர்கள் உறவினர்களுடன் கைகுலுக்கி உரையாடுவதில் எல்லாக் கவலைகளையும் மறந்து விடுவீர்கள்.

**எம்.ஆர். ராஜகோபாலன்**
நிர்வாக அறங்காவலர், காந்திகிராம அறக்கட்டளை

## லெட்சுமி கல்வியியல் கல்லூரி

காந்திகிராம அறக்கட்டளையின்கீழ் இயங்கிவரும் லெட்சுமி கல்வியில் கல்லூரிக்கு தேசியக் கல்வித்தரச் சான்றிதழ் குழு டிசம்பர் 19, 20 ஆகிய தேதிகளில் வருகை தந்தனர். ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் புபேந்திரசிங் ரத்தோர் தலைமையில் பேராசிரியர்கள் (திருமதி) ஆஷா பாண்டே, டாக்டர் விவேக் கோலி ஆகியோர் கல்லூரியின் செயல்பாடுகள் குறித்து தரஆய்வு செய்தனர். மேலும், காந்திகிராம அறக்கட்டளையில் இயங்கிவரும் பல்வேறு அலகுகளையும் பார்வையிட்டனர்.



## குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம்

காந்திகிராம அறக்கட்டளை செயல்படுத்திவரும் குடிநீர் மற்றும் சுகாதாரத்திட்டத்தின், கீழ் குடிநீர்ப் பயன்பாடு குறித்த ஆராய்ச்சி சாமியார்பட்டி கிராமத்தில் நடைபெற்று வருகிறது. பெங்களூருவில் உள்ள அர்க்கெயம் நிதி நிறுவனத்தின் திட்ட மேலாளர் திரு. எம். மனோகர் ராவ் மற்றும் திருமதி சுராஸ்ரீ ஆகியோர் 2011 நவம்பர் 3, 4 ஆகிய தேதிகளில் திட்டப் பணிகளைப் பார்வையிடனர். அவர்கள்



கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள பணிகளை ஆய்வு செய்தனர். மேலும், சுகாதாரக் கருத்துக்கள் பற்றி பள்ளிக் குழந்தைகளுடன் கலந்துரையாடினர். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் ஊரக வளர்ச்சித் துறைத் தலைவர் முனைவர் (திருமதி) லலிதா அவர்களுடன் குடிநீர்ப் பயன்பாடு ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் ஆராய்ச்சிப் பணியின் அறிக்கை தயார்செய்தல் பற்றியும் கலந்துரையாடினர். திட்டப் பணியாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.

**படித்ததில் ரசித்தது**

*இறந்த காலம் உடைந்த பானை;*
*எதிர்காலம் மதில்மேல் பூனை;*
*நிகழ்காலம் கையில் வீணை;*
*வீணையை மீட்டி மகிழுங்கள்.*

*(For Private Circualtion Only)*
*Editorial Team :* **Smt. N. Ramuthai, Smt. R. Revathi, Smt. Meenakshi**
Gandhigram Trust, Gandhigram - 624 302
**Phone :** 0451 - 2452326 & 2452400 **Fax :** 0451 - 2453347
**e_mail :** ggmtrust@sify.com **www.** gandhigram.org

***Printed at :*** **Dr. Soundram Trust, Gandhigram Press,** Gandhigram - 624 302, Telefax : 0451 - 2453347